> நவீன 'பெருநகரத்தில்' கிறிஸ்துவை அறியச்செய்யும் சவால்களை ஏற்றுக்கொள்ள நம்முடைய வசதியான, வழக்கமான வாழ்க்கை முறைகளிலிருந்து வெளியே வர அஞ்ச வேண்டாம்.
>
> –புனித இரண்டாம் ஜோன்போல்

நற்செய்தி மதிப்பீடுகளோடு தொடர்பிருந்தாலும், பெரும்பாலும் அது காலத்துக்குப் பொருந்தாது என்றும், இன்றைய திருஅவையில் பெரும்பாலும் அவை கேள்விக்குறியாகவும், விமர்சிக்கப்படும் நிலையிலும் உள்ளது. பலரும் திருஅவையின் போதனைகளும் பாரம்பரியமும் மிகவும் பழமையானவை என்று கருதுகின்றனர்.

ஆனால் இன்றைய வாசகங்கள் அத்தகைய சவால்கள் புதியவை அல்ல என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. இறைவாக்கினர் எரேமியா தான் அறிவித்த உண்மைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளமுடியாததால் அவருக்கு எதிரான சதித்திட்டங்களை சகித்துக்கொண்டதுபோலவே இன்று உலகில் அதிகம் பிரபலமில்லாத உண்மைகளுக்காக நாம் இணைந்து நிற்கும்போது, நாமும் அனைத்து வகையான சோதனைகளையும் எதிர்கொள்கிறோம். இன்றைய நற்செய்தியில் இயேசுவும் தான் அமைதியைக் கொண்டுவர அல்ல; பிளவுகளைக் கொண்டுவரவே வந்திருப்பதாகக் கூறுகிறார். அன்பு மற்றும் ஒற்றுமைக்கான கிறிஸ்துவ அழைப்புக்கு இது முரணாகத் தோன்றினாலும் உண்மையான ஒற்றுமை, உண்மையைத் தவிர்த்து விட்டு அமையமுடியாது. இது ஒரு தெளிவான நினைவூட்டலாகும். உண்மைக்கு நாம் என்றும் உண்மையோடு இருப்பது, தவிர்க்கமுடியாமல் பாவத்தைப் பற்றிகொள்பவர்களுக்கு எதிராக நம்மை நிச்சயமாக பிரிவினைக்குத் தான் கொண்டுவரும் என்று இயேசு நமக்கு எச்சரிக்கிறார்.

இருள் இருந்தபோதிலும் இன்னும் ஒளிக்காக ஏங்குபவர்கள் பலர் உள்ளனர். அன்பு மற்றும் உண்மையான அர்த்தத்திற்காகவும் மனித இதயம் ஆழமான ஏக்கம் கொண்டிருப்பது பல நூற்றாண்டுகளாக மாறவில்லை. நவீனத்துவத்தின் போர்வையின் கீழ் மக்கள் இருந்தாலும், இன்னும் கடவுள் இருப்பதைப் பற்றிய அதே கேள்விகளுடனும், அருள் மற்றும் மீட்புக்கான அதே தேவையோடும் இன்னும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இதனால் தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடக்ககால திருஅவையின் நாட்களில் இருந்ததைப்போலவே இன்றும் மறைபோதகம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. பண்டைய கால மக்கள் மீட்பு மற்றும் பாவமன்னிப்பு போன்றவற்றைப் பற்றிய நற்செய்திகளைக் கேட்க ஏங்கியதைப்போலவே, நம் காலத்திலும் மக்களும் கடவுளின் அன்பு, இரக்கம், மற்றும் மீட்பின் அறிவிப்பிற்காக ஏங்குகிறார்கள்.

அப்படியானால், நம் அன்றாட வாழ்க்கையின் அவசரயுகத்தில் நற்செய்தியைக் கேட்கவேண்டிய ஒரு சகோதரர் அல்லது சகோதரியுடன் நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்துகொள்ள, நம் நம்பிக்கையைப் பற்றிய புரிதலையும் அறிவையும் ஆழப்படுத்திக்கொள்ள நேரம் ஒதுக்குவோம்.

### இன்றைய இறைவார்த்தை:

எரேமியா 38: 4-6, 8-10

திருப்பாடல்: 40: 2-4, 18

எபிரேயர் 12: 1-4

லூக்கா 12: 49-53

INTERNAL CIRCULATION ONLY
BUL 33/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 20 ஆம் ஞாயிறு | 17 ஆகஸ்ட் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: சமுதாயம் – இறைவாக்குரைத்தல் காணக்கூடிய ஒத்துழைப்புக்கு அழைப்பு



# நமது நம்பிக்கையின் உண்மைகளை அறிவித்தல்

நம்முடைய தேசத்தின் 69 ஆவது சுதந்திர தினத்தை இந்த மாதம் கொண்டாடும், இந்த நேரத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, நாம் வாழும் சமூகத்திற்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டிய நமது கடமையை நினைவுகூர்ந்து சிந்திக்க து ஒரு பொருத்தமான தருணம்.

**கிறிஸ்தவர்களாக, நாட்டின் குடிமக்களாக இருக்கும் நமக்கு கடமைகளுக்கு அப்பாற்பட்ட பொறுப்பு உள்ளது. நாம் எப்போதும் உண்மைகளுக்கும் நற்செய்தியின் மதிப்பீடுகளுக்கும் அவை பிரபலமான கருத்து மற்றும் கலாச்சாரத்துடன் முரண்பட்டாலும் கூட அவற்றை ஆதரித்து நிற்கிறோம். இந்த உலகில் பெரும்பாலும்**